அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 87/2021

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 08-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 08.06.2026 |
| பெயர் செல்வம் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:-

1. நான் இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்தேன். கிரைய ஒப்பந்தமானது யாருடன் போடப்பட்டது என்றால் நான் மகேந்திரம் என்பவர் பெயரில் எழுதிக்கொடுத்தகிரைய ஒப்பந்தம். கிரையம் சம்மந்தப்பட்ட பணப்பரிமாற்றம் பற்றி கிரையஒப்பந்தத்தில் குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. கிரைய முன்தொகை ரூ15000 ஆகும். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நான் மேற்கூறிய மகேந்திரன் என்பவரின் இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமானவாக்குமூலம் விவரங்கள் நான்

படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். சார்பதிவாளர் முன் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கிரையஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரையஒப்பந்தம் ரத்துசெய்யவேண்டும் என்றும் எனக்கும் மகேந்திரன் என்பவருக்கும் இடையே கிரையசம்மந்தமாக எந்த பணபரிமாற்றமும் இல்லை என்று சார்பதிவாளரிடம் நான் NOC கொடுத்தேனா என்றால் இல்லை. எனவே நான் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.